
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1082**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

45

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ‘இருவர் உள்ளம்’ மனித உணர்வுகள் மகத்தானவை!

மிகத்தீவிரமான சமூக அரசியல் பிரச்சினைகளைப் பேசிய திரைப்படங்களுக்கு கதை, திரைக்கதை வசனத்தைக் கலைஞர் எழுதிக் கொண்டிருந்த கொந்தளிப்பான 1963–ஆம் ஆண்டு காலகட்டத்தில், இருவர் உள்ளம் போன்ற காதலை மையமாகக் கொண்ட ஒரு திரைப்படத்திற்கும் திரைக்கதை வசனத்தை கலைஞர் எழுதியிருப்பது நமக்கு வியப்பாக உள்ளது.

நீண்ட வசனங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பில்லாத திரைப்படம்தான். ஆனால், சமூகத்திற்குச் சொல்லப்பட வேண்டிய செய்தியை உள்ளடக்கிய திரைப்படம் - இயக்குனர் எல்.வி.பிரசாத் அவர்களின் திரைப்படம் - குறிப்பாக பெண்ணை (நாயகியை) மையக் கதையாகக் கொண்ட படம் என்கிற காரணங்களால் கலைஞர் இப்படத்திற்கு திரைக்கதை வசனத்தை எழுதியிருப்பார் என்று தோன்றுகிறது.

ஊதாரியாகத் திரியும் பணக்கார இளைஞன் ஒருவனால் (செல்வம் - சிவாஜி) பாதிக்கப்படும் பல பெண்களில் இரண்டு பெண்கள் (சாந்தா - சரோஜா தேவி, வசந்தி - பத்மினி ப்ரியதர்ஷினி) மட்டும் அவனது வாழ்வில் தொடர்ந்து வருகின்றனர். அவனால் கட்டாயப்படுத்தி மனைவியாக்கப்பட்ட ஏழைப் பெண் சாந்தா அவனைத் திருத்தி பண்படுத்துகிறாள். அவனால் கைவிடப்பட்ட பணவெறி பிடித்த வசந்தியோ அவனது வாழ்வைக் கெடுத்துச் சீரழிக்க முற்படுகிறாள்.

இந்த இருவரது முயற்சிகளுக்கும் இடையே பயணிக்கும் செல்வம் சந்தர்ப்ப சூழ்நிலையால் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறான். அதற்கு அவனது கடந்த காலத் தவறான பழக்க வழக்கங்களும் நட்புமே காரணமாக அமைகின்றன. இறுதியில் அவனது மனைவி சாந்தா போராடி கொலைக்குற்றத்தில் இருந்து அவனை மீட்டு நிரபராதி என்று நிறுவுகிறாள்.

திரைப்படத்தின் தொடக்கமே ’பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்’ என்று செல்வம் பாடிக்கொண்டு உல்லாசமாக காரில் பெண்களுடன் பவனி வருவதுடன் தொடங்குகிறது.

### மனதை விலைக்கு வாங்க முடியாது

பெற்றோரின் பணபலத்தைக் கொண்டு, தான் விரும்பும் பெண்களை விலைக்கு வாங்கிவிட முடியும் என்று கருதும் (செல்வத்தின்) ஒரு ஆணின் ஆணவத்திற்குப் பாடம் புகட்டும் விதமாகக் கலைஞர் இப்படத்தில் வசனங்களை எழுதியுள்ளார்.

செல்வத்தின் விருப்பத்தின் பேராலும் சாந்தாவின் பெற்றோர் வற்புறுத்தலினாலும் சாந்தாவுக்கும் செல்வத்துக்கும் திருமணம் நடைபெறுகிறது. திருமணமான முதல் நாள் இரவில் இருவரும் சந்திக்கின்றனர். செல்வம் சாந்தாவின் அருகில் மகிழ்ச்சியோடு வருகிறான். ஆனால், சாந்தா கண்ணீர் சிந்தியபடி நிற்கிறாள். அதைக்கண்டவுடன்.....

**செல்வம்:** சாந்தா.... ஏன் அழுகிறாய் சாந்தா

**சாந்தா:** நான் உங்களுக்கு என்ன துரோகம் செய்தேன்? எதற்காக என் மீது கங்கணம் கட்டிக்கொண்டு வஞ்சம் தீர்க்கிறீர்கள்?

**செல்வம்:** எல்லாம் உன் மீது கொண்ட உண்மைக் காதலின் விளைவுதான் சாந்தா.

**சாந்தா:** இப்படி எத்தனை பேருக்குச் சொல்லியிருப்பீர்கள். இன்னும் எத்தனை பேருக்குச் சொல்லப் போகிறீர்கள் என்பதும் தெரியும்.

படங்கள் உதவி : ஞானம்



**செல்வம்:** சாந்தா... காதல் பதுமைகளில் உன்னையும் ஒருத்தியாகக் கருதியிருந்தால் நான் கல்யாணம் வரை வந்திருக்கவே மாட்டேன்.

**சாந்தா:** கல்யாணம் .... கல்யாணமா இது? ஒரு ஏழைக் குமாஸ்தாவின் அந்தஸ்திற்கும் ஒரு பெரிய சர்க்கார் வக்கீலின் கௌரவத்திற்கும் இடையே நடந்த போட்டியின் முடிவு. பணக்காரர் நீங்கள். நினைத்தால் எதையும் செய்யலாம். மலரைக் கசக்கி எறிந்துவிட முடியும். ஆனால், ஒன்று சீமான் வீட்டுப் பணத்தால் ஒரு அரும்பை மலரச் செய்ய முடியாது என்பது ஞாபகம் இருக்கட்டும்.

**செல்வம்:** சாந்தா என்னைக் கொல்லாதே...

**சாந்தா:** நீங்கள் என் கணவர். அதனால் நான் உங்களுக்கு அடிமை. என் உடல் உங்களைக் கவர்ந்தது. விலை கொடுத்து வாங்கி விட்டீர்கள். என் உடலை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

இக்காட்சியில் கலைஞரின் வசனங்கள் ஒரு பெண்ணின் தன்மான உணர்வையும் ஆணாதிக்கச் சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட ஆணின் காதல் உணர்வுகளையும் மிக நுணுக்கமாகப் படம்பிடித்துக் காட்டும் விதமாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.



> “கலைஞரின் வசனங்கள் ஒரு பெண்ணின் தன்மான உணர்வையும் ஆணாதிக்கச் சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட ஆணின் காதல் உணர்வுகளையும் மிக நுணுக்கமாகப் படம்பிடித்துக் காட்டும்.”

### கல்லறையின் மீது மலர்

அடுத்து இறுதிக் காட்சி. நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் செல்வம் நிறுத்தப்பட்டிருக்கிறான். அரசுத் தரப்பு வழக்கறிஞரான அவனது தந்தை நீதிமாணிக்கம் அவனுக்கு எதிராக வாதாடுகிறார். செல்வம்தான் வசந்தியைக் கொலை செய்தான், எனவே அவனுக்கு இ.பி.கோ. 302-ஆவது பிரிவின்படி மரண தண்டனை வழங்க வேண்டும் என்கிறார். வாதங்களைக் கேட்ட நீதிபதி செல்வத்திடம் நீ எதுவும் சொல்ல விரும்புகிறாயா என்று கேட்கிறார். அதற்கு செல்வம் பதில் சொல்கிறான்....

**செல்வம் :** நீதிபதி அவர்களே! செல்வத்தின் தந்தை தன் மகனைத் தூக்கு மேடைக்கு அனுப்புகிறார். அப்பாவி செல்வமோ தூக்குக் கயிறை முத்தமிடுவதன் மூலம் தன் தந்தையின் புகழ் கிரீடத்திலே புதியதொரு மாணிக்கத்தைப் பொருத்துகிறான். இந்த ஒரு நன்றியுணர்ச்சிக்காக வாவது என் கல்லறையின் மீது ஒரே ஒரு மலரை என் தந்தை, ‘உன்னை மன்னித்து விட்டேனடா மகனே’ என்று சொல்லிக் கொண்டே வைத்தால் போதும்.

ஆனால் நான் நிரபராதி என்று ஒரேயொரு இதயத்திற்கு மட்டும் தெரியும். எனக்காக கண்ணீர் சிந்த ஒரு உயிர் இருக்கிறது. என் வாழ்க்கையில் ஏற்பட்ட பழி பாவம் களங்கம் அத்தனையையும் அந்தக் கண்ணீர் கழுவி விடும். தினந்தோறும் என் சமாதியை அந்தக் கண்ணீர் நனைத்து ஈரமாக்கும். என் தாயின் பெருமூச்சு புதைகுழியிலே புதைந்து கிடக்கும் என் புழுக்கத்தைப் போக்கும் தென்றலாக வீசிக் கொண்டிருக்கும்.

கடைசியாக ஒன்று அப்பா! இல்லை .... இல்லை.... என்னை மன்னிக்க வேண்டும். சர்க்கார் வக்கீல் அவர்களே.....

கதறி அழுகிறான்....

என்னால் அப்படி அழைக்க முடியாது... அழைக்கவே முடியாது... நீதிபதி அவர்களே என்னை மன்னித்து கடைசியாக ஒரு முறை என் அப்பாவை அப்பா என அழைக்க அனுமதி தாருங்கள். .... அப்பா.... அப்பா...

நீதிமன்றம் வழங்கும் எந்தத் தீர்ப்புக்கும் நான் தலை வணங்குகின்றேன். உங்களை மன்றாடிக் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன். என்றாவது ஒரு நாள் உங்கள் மகன் நிரபராதி என்று தெரிந்த பிறகு நான் சொன்னேனே மலர்! ஒரேயொரு வெள்ளை மலர், சின்ன மலர் அதை நான் மறைந்து கிடக்கும் பூமியின் மீது போடுங்கள். எனக்கு அது போதும் அப்பா... அது போதும் எனக்கு. போய் வருகிறேன் அப்பா....’ என்று கை கூப்பி வணங்குகிறான்.

இந்த நீதிமன்றக் காட்சியில் கலைஞர் மிகவும் உணர்ச்சிப்பூர்வமாகவும் அதே நேரம் தனது பகுத்தறிவுக் கொள்கைக்குப் பங்கம் வந்துவிடாமலும் வசனத்தை எழுதியுள்ளார். ‘புராணிகர்கள் சொல்வதுபோல மேலுலகம் என்ற ஒன்று இருந்தால்’ என்று செல்வம் சொல்வதாகவும், அதேபோல தந்தை இறந்த பிறகு என்று வெறுமனே கூறிவிடாமல், ‘பல்லாண்டு காலம் இங்கே வாழ்ந்து என் தந்தை மேலுலகம் வரும்போது’ என்று செல்வம் கூறுவதாகக் கலைஞர் வசனம் எழுதியுள்ளது நம்மை அசர வைக்கிறது.

அதேபோல ‘தாயின் பெருமூச்சு எனது புதைகுழியின் புழுக்கத்தைப் போக்கும் தென்றலாக வீசும்’ என்ற வசனம் தமிழ்சினிமா அதுவரைக் காணாத, கேட்டிராத வசனமாகும். இத்தனை நளினமாகவும், நாகரிகமாகவும் மனித உணர்வுகள் காயப்பட்டுவிடாமல் மதிக்கப்படும் விதமாகவும் வசனங்களை எழுத கலைஞர் ஒருவரால்தான் இயலும். கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய குடும்பக் காவியங்களுள் மிகவும் குறிப்பிடத்தகுந்த திரைப்படம் ‘இருவர் உள்ளம்’ என்றால் அது மிகையில்லை.

...காட்சி விரியும்

## ‘தீ பரவட்டும்’ பற்றிப் படரும் கருத்து!




“தமிழருக்குத் தமிழ் நெறி, தமிழ் முறை, ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக்கூடியன கலையாக இருத்தல் வேண்டுமே யொழிய, வேறோர் இனத்தைப் புகழ்வதும், அதற்கு ஆதிக்கமளித்துத் தமிழ் மக்கள் மனத்திலே தன்னம் பிக்கையற்றுப் போகும்படியும் தமது இனத்தைப் பற்றியே தாழ்வாகக் கருதிக்கொள்ளும்படியான நிலைமை உண்டாக்குவதுமான கதை, காவியம், இலக்கியமென்பவைகளைக் கொளுத்த வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம். தமிழர் என்று நான் கூறும்போது, தமிழ் மொழி பேசுவோர் என்பவரை மட்டுமல்ல நான் குறிப்பது; தமிழ் இனத்தை என்பதை நினைவூட்டுகிறேன்.” பேரறிஞர் அண்ணா, ‘தீ பரவட்டும்’ நூலுக்காக இதை எழுதினார்.

இந்தக் கருத்து இன்றும், இளைய தலைமுறையை ஈர்க்கும் ஒன்றாக உள்ளதை, சென்னைப் புத்தகக் காட்சியில் ‘தீ பரவட்டும்’ நூல் விற்பனை மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. பூம்புகார் நூல் நிலையம், சீதை பதிப்பகம், ஆழி, திராவிடியன் ஸ்டாக், எதிர் வெளியீடு எனப் பல பதிப்பகங்கள் இந்த நூலை மறுபதிப்பில் வெளியிட்டுள்ளன. இவர்களிடம் இளைஞர்கள் நூல்களை வாங்கிச்செல்வது, புத்தகக் காட்சியில் கவனம் ஈர்க்கும் ஒன்றாக மாறியுள்ளது.

‘இந்த நூலுக்கு, இந்த ஆண்டு அதிகமான தேவை எழுந்துள்ளது’ என இந்தப் பதிப்பகங்கள் குறிப்பிடுகின்றன. சமீபத்தில், வெளியான ‘பராசக்தி’ திரைப்படத்தில், ‘தீ பரவட்டும்’ என்கிற வசனத்தை ‘நீதி பரவட்டும்’ என தணிக்கைத் துறை மாற்றக் கூறியதாகத் தகவல்கள் வெளிவந்தன. ஆனால், பேரறிஞர் அண்ணா பற்றவைத்த தீ எளிதில் அணையாது.

## ஃப்ளாஷ்பேக்



### சிந்தனையில், எழுச்சி உருவாக்கும் படம்!



கம்பம் மு.கலைக்கமால்

1955-ஆம் ஆண்டு மே மாதம் 10-ஆம் தேதி, கம்பம் நகரம், கேரள எல்லைப் பகுதியான வண்டிப் பெரியார் ஆகிய இடங்களில் நடைபெற்ற கழகக் கூட்டங்களுக்கு பேரறிஞர் அண்ணா வருகைதந்து உரையாற்றினார். நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், என் சிறிய தகப்பனார் மறைந்த எம்.எஸ்.சின்னவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.தங்கராசு, கே.பி.திருவேங்கடம், கே.டி.எஸ். மணி, கே.ஏ.கலையழகன், எம்.சிக்கந்தர் என கழகத் தோழர்கள் பலரும் அண்ணாவுடன் அப்போது புகைப்படம் எடுத்துள்ளனர். 70 ஆண்டுகளின் வரலாற்றை தேக்கி வைத்துள்ள இந்தப் படம், என் வீட்டுச் சுவரில் மாட்டப்பட்டுள்ளது. இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும் போதெல்லாம் என் சிந்தனையில் எழுச்சி உண்டாகும்.

– கம்பம் மு.கலைக்கமால்,
தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு — கருவூலம்

### இலட்சியங்களில் முக்கியமானவை!

1958-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5-ஆம் தேதி, கோவை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாடு காட்டூரில் நடைபெற்றது. ‘நமது இலட்சியம்’ என்கிற தலைப்பில் உரையாற்றிய என்.எஸ்.இளங்கோ, ‘சாதியற்ற சமுதாயம்- பொருளாதாரத்தில் முன்னேற்றம் – வடவர் ஆதிக்கமற்ற சமுதாயம் இந்த மூன்றையும் உருவாக்கவேண்டியது நமது இலட்சியங்களில் முக்கியமானவை’ என முழங்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131